அவசரம் / உடனடி நடவடிக்கைக்கு

/பதிவுத்துறை/

அனுப்புநர்
கூடுதல் பதிவுதுறைத்தலைவர்,
(முத்திரை மற்றும் பதிவு)
பதிவுதுறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை–28.

பெறுநர்
1. அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள்.
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள். (நிர்வாகம் & தணிக்கை)
3. அனைத்து சார்பதிவாளர்கள்.

ந.க.எண். 15406 /சி1/2024 நாள். 05.02.2025.

ஐயா/அம்மையீர்,

பொருள்: பதிவுத்துறை – தைப்பூசம் (11.02.2025 செவ்வாய்கிழமை) மங்களகரமான நாளில் பதிவு அலுவலகங்கள் செயல்படுவதற்கு அரசால் அனுமதிக்கப்பட்டது – பதிவு அலுவலகங்களை செயல்பாட்டில் வைத்திருக்குமாறு தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: அரசு வணிகவரி மற்றும் பதிவுத்துறை கடித எண்.356/ ஜெ2/2022– 1 நாள்.07.01.2022 உடன் பெறப்பட்ட அரசு வணிகவரி மற்றும் பதிவுத்துறை கடித (டி) எண்.68, நாள்.12.04. 2021.

******

அசையா சொத்து குறித்த ஆவணப்பதிவுகளை மங்களகரமான நாட்களில் மேற்கொள்ள பொது மக்கள் விரும்புவதால் அரசு பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை நாட்களாக அறிவிக்கப்படும் சில மங்களகரமான நாட்களில் பொது மக்களால் ஆவணப்பதிவுகள் மேற்கொள்ள பதிவு அலுவலகங்களை செயல்பாட்டில் வைத்திட பார்வையில் காணும் கடித வழி அரசால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. அதன் அடிப்படையில் தற்போது வரவிருக்கும் 11.02.2025 செவ்வாய்கிழமை அன்று தைப்பூசம் நாளில் ஆவண பதிவுகள் மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து பதிவு அலுவலகங்களும் அன்றைய தினத்தில் வழக்கம்போல் காலை 10.00 மணி முதல் ஆவண பதிவு முடியும் வரை செயல்பாட்டில் வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Verified RealEstate™

3. மேற்குறிப்பிடும் விடுமுறை நாளில் மேற்கொள்ளப்படும் ஆவணப் பதிவுகளுக்கு பதிவுச் சட்டம் கீழுள்ள Table of fees இனம் 17(3)–ன் a,b,c –ல் கூறப்பட்டவாறு விடுமுறை நாள் ஆவணப் பதிவிற்கான கட்டணம் சேர்த்து வசூலிக்கப்படவேண்டும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

4. மேலும் அன்றைய தினம், ஸ்டார் 2.0 திட்டப்படி அனைத்து அலுவலகங்களிலும் பதிவுப் பணி இணையவழி தடையின்றி நடைபெற ஏதுவாக பொதுமக்களுக்கு முன் பதிவு செய்திடும் வசதி மற்றும் அலுவலக பணியாளர்கள் பொதுமக்களுக்கான Help Desk மற்றும் Help Line வசதி ஆகியவற்றினை எவ்வித குறைபாட்டுக்கும் இடமின்றி உடன் ஏற்படுத்திட TCS மென்பொறியாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

6. துணை பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்கள், தங்கள் எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுவதை கண்காணிக்கவும் கோரப்படுகிறார்கள்.

ஒம்/–05.02.2025
கூடுதல் பதிவுத்துறை தலைவர்
(முத்திரை மற்றும் பதிவு)

/ஆணையின்படி/

மாவட்டப்பதிவாளர்

நகல் :

1. அரசு முதன்மை செயலாளர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமை செயலகம்,
சென்னை – 9.
2. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை–14.
3. அனைத்து உயர் அலுவலர்கள், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்.
4. பதிவுத்துறைத் தலைவரின் நேர்முக எழுத்தர்.
5. நேர்முக உதவியாளர் (தனி),
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்.
6. முக்கிய ஆணைக்கோப்பு.
7. கணினி பிரிவு

Verified RealEstate™